**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

**<u>அசல் வழக்கு எண். 88/2013</u>**

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் நாள் செவ்வாய்கிழமை வாதி/ பிரதிவாதி சாட்சியாகிய இவ்வாக்குமூலம் ஆக்ட் 10/1873ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.டி.ஷோபனா, உதவியாளர் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையிலும் நேரடி கவனத்திலும் கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. எஸ். ரமேஷ் | தொழில் | : |
| தந்தை பெயர் | : சண்முகம் | ஜாதி | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

**நீ.ம.சா.1 முதல் விசாரணை**

இவ்வழக்கில் நான் இந்நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.115/2013ல் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆணையர் ஆவேன். நான் நீதிமன்ற அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 15.12.2014ம் தேதி அன்று என்னை இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையராக நியமித்து மனுசொத்து சம்மந்தப்பட்ட சர்வே எண்.135/1ல் மற்றும் 140 ஆகிய சர்வே எண்கள் சம்மந்தப்பட்ட இடத்தை சர்வே அளவுடன் 7.12.1960 மற்றும் 17.8.1962 தேதியிட்ட கிரய ஆவணங்களின் அடிப்படையில் அளந்து மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய இந்நீதிமன்றம் என்னை உத்தரவிட்டது. அதன் படி நான் 28.10.2015ல் இருதரப்பு வழக்கறிஞர்கள் சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அவர்களுக்கு 14.11.2015 தேதி அன்று மனு சம்மந்தப்பட்ட இடத்தை பார்வையிடுவதாக அறிவிப்பு கொடுத்து அன்றைய தினம் மேற்படி நபர்கள் உதவியுடன் தாவா இடங்களை அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகும். நான் வரைந்த வரைபடம் நீ.ம.சா..ஆ.2 ஆகும். சர்வேயர் என்னிடம் கொடுத்த சர்வேயர் வரைபடம் நீ.ம.சா.ஆ.3 மற்றும் சர்வேயர் என்னிடம் கொடுத்த டவுன் ரிஜிஸ்டர்கள் மற்றும் புலவரைபடம் நீ.ம.சா.ஆ.4ஆகும்.

குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில்-

இந்நீதிமன்ற வாரண்ட் படி வாதி மற்றும் பிரதிவாதிகளின் ஆவணங்களை வைத்தும் பார்வையிட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது என்றால் சரிதான். 7.12.1960 கிரய பத்திரமானது பிரதிவாதி நிர்மலாவுக்கு பாத்தியப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். அதேபோல் 17.8.1962 தேதியிட்ட கிரய பத்திரம் வாதிக்கு பாத்தியப்பட்ட கிரய பத்திரம் என்றால் சரிதான். நான் மேற்படி ஆவணங்களின் அடிப்படையிலும் மற்றும் நேரடியாக உள்ள புல அளவுகளின் அடிப்படையிலும் அளந்து பார்த்து தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரய பத்திரத்தில் கண்டுள்ள சொத்துகளின் அளவுகளின்படி நான் அளந்து எனது அறிக்கையில் அதை 6 அயிட்ட சொத்துக்களாக காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவரத்தை எனது வரைபடத்திலும் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதி நிர்மலா அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஒரே அயிட்ட சொத்தாக எனது அறிக்கையில் காண்பித்துள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண்.140 சுந்தரமூர்த்தி என்பவர் பெயரில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் வருவாய் ஆவணங்களின் அடிப்படையில் குறிப்பிட்டுள்ளேன். நான் வாதி ராமகிருஷ்ணன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட இடத்தை சிவப்பு நிறத்திலும் பிரதிவாதி நிர்மலாவுக்கு பாத்தியப்பட்ட இடத்தை நீல நிறத்திலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எனது வரைபடத்தில் பச்சை நிறம் விட்டுள்ள இடம் இருதரப்பினர்களின் ஆவணங்களின் படி அவர்களுக்கு வரவில்லை. சர்வேயர் அறிக்கையில் சர்வே எண் 135/1 என்ற இடம் ராமகிருஷ்ணன் என்பவர் பெயரில் சதுரடி 786 அவருக்கு பாத்தியப்பட்டது என்று சர்வேயர் அவரது வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். சுந்தரமூர்த்திக்கு சர்வே எண்.140ல் 136.5 சதுர மீட்டர் நீல நிறத்தில் சர்வேயர் அவரது வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். சர்வேயர் கொடுத்த டவுன் எக்ஸ்டராட் ரிஜிஸ்டரில் சர்வே எண்.135/1 ராமகிருஷ்ணன் பெயரில் துலங்குகிறது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண் 140 சுந்தரமூர்த்தி என்பவர் பெயரில் துலங்குகிறது என்றால் சரிதான். நான் இருதரப்பினர்கள் ஆவணங்கள்படி அவர்களுக்கு வராத இடத்தை பச்சை நிறத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதை சர்வேயர் அவரது வரைபடத்தில் அதுபோல் எதுவும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றாலும் ஜக்பந்தி மட்டும் தான குறிப்பிட்டுள்ளது என்றால் இருதரப்பினர்களின் ஆவணங்களில் குறிப்பிடவில்லை ஜக்பந்தி மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் எனது வரைபடத்தில் பச்சை நிறம்

கொண்ட இடத்திற்கு வடக்கு பக்கம் சர்வே எண் 135/1 ல் வருகிறது என்றால் மேற்படி இடம் 7.12.1960 தேதியிட்ட கிரய ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அளவீட்டின் படி அளவு செய்யும் போது இரு சர்வே நெம்பர் 135/1 மற்றும் 140 உட்பட்ட இடமாக வருகிறது. நான் எனது வரைபடத்தில் பச்சைநிறம் கொண்ட இடம் சர்வே நெம்பர் 135/1ல் வருகிறது ஆனால் இரு தரப்புகளின் ஆவணங்களின்படி அந்த பச்சைநிறம் விட்டுள்ள இடம் அவர்களுக்கு வரவில்லை. சர்வேயர் புல வரைபட நீ.ம.சா.ஆ.3 ன்படி தான் நிர்மலா அவர்களின் ஆவணத்திலும் உள்ளது என்றால் சரியல்ல. நான் எனது வரைபடத்தில் பச்சைநிறம் விட்டுள்ள இடம் வாதிக்கு பாத்தியப்பட்ட இடம் என்றாலும் சர்வேயர் சரியாக அளக்கவில்லை என்றால் சரியல்ல. பழைய புல வரைபடத்தில் எனது வரைபடத்தில் பச்சை நிறம் விட்டுள்ள இடம் ராமகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சர்வேயர் அளவின்படி சரிதான் ஆனால் ஆவணங்களின்படி சரியல்ல. நான் சரியாக அளவீடு செய்யாததால் தான் நீ.ம.சா.ஆ2 மற்றும் நீ.ம.சா.ஆ.3 வரைபடங்களுக்குள் வேறுபாடு வருகிறது என்றால் சரியல்ல. நிர்மலா அவர்களின் ஆவணங்களின் சொல்லிஉள்ள ஜக்பந்திகள் தவறு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.